**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness

Mcop.407/2021

**எ.ம.சா.1 முத்துக்குமார்**

| | |
|---|---|
| Name | : முத்துக்குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :05.03.2026 |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்**

நான் இந்த வழக்கின் 2ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தை பற்றி நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயம் மனுதாரர் இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றார் என்றால் சரிதான். காப்பீடு செய்யப்பட்ட இருசக்கர வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் மனுதாருக்கு பின்னால் ஒட்டி வந்தார் என்றால் சரிதான். மனுதாருக்கு விபத்து நடந்த இடத்திற்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டி சொந்த ஊர் என்றால் தெரியாது. விபத்து சமயம் எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகத்தின் ஒட்டுனரான 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரையாகவும் ஒட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார்

என்றால் சரியல்ல. மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் ஆவார். முன்னால் ஒரு வாகனம் சென்றால் பின்னால் வரும் வாகனம் 10 மீட்டர் இடைவெளி விட்டு வரவேண்டும் என்றால் சரிதான். 10 மீட்டர் இடைவெளி விட்டு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த வாகனம் வந்திருந்தாலும் அதனை முன்னால் சென்ற வாகனத்தை கவனித்து பிரேக் பிடித்திருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரியல்ல. திடீரென எந்த ஒரு சிக்னலும் இல்லாமல் வலதுபுறம் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது. 10 மீட்டர் இடைவெளி விட்டு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த வாகனத்தின் ஒட்டுனரின் கவனக் குறைவால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்றும், மனுதாரர் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. 10 மீட்டர் இடைவெளி விடாமல் 1ம்எதிர்மனுதாரர் வாகனத்தை இயக்கியதால் விபத்து ஏற்பட காரணமாக இருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவரது செல்வாக்கை பயன்படுத்தி படிப்பறிவு இல்லாத நிலையிலும் மனுதாருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக தொடர் சிகிச்சையில் மருத்துவமனையில் இருந்ததை சாதகமாக பயன்படுத்தி கொண்டு மனுதாரர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு மனுதாரருக்கு எதிராக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக இருந்து வருகிறது என்றும், அதனை மனுதாரர் எதிர்கொண்டு நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. எதிரூரையில் சொல்லாத சங்கதிகளை முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவருடைய வாகனத்தை எங்களது நிறுவனத்தில் முழு காப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாருக்கு செல்லதக்க ஒட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வேகமாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியதால் அவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால்சரியல்ல. மனுதாரர் காப்பீடு கழகத்தை

பொறுத்து 3ம் தரப்பினர் என்றால் சரிதான். காயம்பட்ட மனுதாரர் 3ம் நபர் என்பதால் இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருடன் அவரது மனைவி இருசக்கர வாகனத்தில் வந்ததால் அவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். களப்பணியாளர் அறிக்கை எங்களுக்கு விரோதமாக இருப்பதாக அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாருக்கு இழப்பீடு கொடுக்க கூடாது என்பதற்காக நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,<br>
கூடுதல் சார்பு நீதிபதி,<br>
தென்காசி.